கல்குடா கல்வி வலய வனநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை கூ.பொ.த (இ/த) – 2018 ஆனி

தரம்: 13 (2018)	தவணை: 06	நாடகமும் அரங்கியலும்-I	நேரம்: 3மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

பகுதி 1

1 – 40 வரையுள்ள வினாக்களுள் சரியானதும் மிகப்பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தின் மேல் புள்ளடியிடுக

1 .எலிசபெத்தியன் காலத்தில் பிரதானம் பெற்ற அரங்க வடிவம்
1. நீள்சதுர மேடை 2. ஊர்தி அரங்கு 3. குளோப் அரங்கு
2. 4.திறந்த வெளியரங்கு 5. புரொசீனியம் அரங்கு

2. நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படும் அரங்க வடிவ வகைகள்
1. இரண்டு 2. மூன்று 3.நான்கு 4.ஐந்து 5.ஆறு

3. குன்றக்குரவை, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை என்பவை ஆடப்பட்ட அரங்கு
1. வட்டம் 2. திறந்த வெளி 3. செவ்வகம் 4. சதுரம் 5.முக்கோணம்

4. நடிகரின் உதவியாளராகவும் அதே நேரம் பார்ப்போரின் கண்களில் படாத வகையிலும் இயங்கி நாடகத் தயாரிப்பினை வெற்றிகரமானதாக்குபவர்
1. நெறியாளர் 2 .இசையமைப்பாளர் 3. காட்சி மாற்றுனர்
4. ஒளியமைப்பாளர் 5. மேடைமுகாமையாளர்

5. பரதர் கூறும் 'ஸ்வேத' எனும் பாவம் குறிப்பது
1. உடல் நடுங்குதல் 2. குரல் மாற்றம் 3. மயக்கம் 4. வியர்த்தல் 5. கண்ணீர் சொரிதல்

6. ''நடிகரின் உணர்ச்சியை மறுதலித்து நடிகரின் அறிவார்ந்த எதிர்வினையைக் காட்டுதலே சித்திரிப்பு'' என்பதை வலியுறுத்திய மேல்நாட்டு நாடகக் கலைஞர்
1. ஸ்ரனிஸ்லவ்ஸ்கி 2. சாமுவல் பெக்கட் 3. பேட்டோல் பிறக்ட் 4. சேக்ஸ்பியர் 5. அட்டாவுட்

7. பின்வருவனவற்றுள் சமஸ்கிருத நாடகக் கதைப் பின்னலின் ஐந்து பகுதிகளுள் அடங்காத அம்சம் எது?
1. பிஜ 2.விந்து 3.பதாக 4.நியதாப்தி 5.கார்ய

8. சமஸ்கிருத நாடகங்களின் கதைப்பின்னலில் வரும் 'பலாகம' என்பது
1. தலைவனின் எதிர்பார்ப்பை பார்ப்போர் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம்
2. தலைவனின் குறிக்கோளை அடைவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள்
3. தலைவனின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுமா எனும் அந்தர நிலை
4. தலைவனின் எதிர்பார்ப்பு நிறைவேறும் எனும் முற்கோடி காட்டல்
5. தலைவனின் எதிர்பார்ப்பு நிறைவடையும் சந்தர்ப்பம்

9. பின்வருவனவற்றுள் சமஸ்கிருத நாடகக் கதைப் பின்னலின் ஐந்து சந்தர்ப்பங்களுள் அடங்காத அம்சம் எது?
1. ஆரம்பம் 2. எத்தனம் 3. பிராப்தியாய 4. பிரகரி 5. பலாகம

10. பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலை எனக் கொள்ள முடியாதது
1. இசை 2. நடனம் 3. சிற்பம் 4. வில்லுப்பாட்டு 5. நாடகம்

11. நாடகத்தின் உண்மையான மத்தியஸ்தராகக் கொள்ளப்படுபவர்
1. நடிகர் 2. பார்வையாளர் 3. நெறியாளர் 4. தயாரிப்பாளர் 5. இசையமைப்பாளர்

www.ikeu.lk

12. நடனத்தை பிரதான ஊடகமாகக் கொண்ட நாடக வடிவம்
1. இசை நாடகம் 2. ஒப்பேறா 3. நிருத்திய நாடகம் 4. மகிடி 5. கோலம்

13. 'கோடோவிற்காகக் காத்திருத்தல்' எனும் நாடகம்
1. அபத்தம் 2. யதார்த்தம் 3. இயற்பண்பு 4. குறியீட்டு 5. படிம வகை நாடகமாகும்

14. தலைக்கோல் விருது பெற்ற ஈழத்தின் புகழ்பெற்ற நாடகக் கலைஞர்
1. அ.தாசீசியஸ் 2. காமினி பொன்சேகா 3. வி.வி.வைரமுத்து
4. எஸ்.ரி.அரசு 5. பிரான்சிஸ் ஜெனம்

15. மன்னன் விஜயன் குவேனிக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமையால் அவனுக்குப் பின்னர் அரச பதவியை ஏற்ற பண்டுவஸ்தேவ மன்னனுக்கு ஏற்பட்ட தீங்குகளைக் களைவதற்காக நடத்தப்படும் சடங்கு
1. கொஹம்பகங்காரிய 2. ரட்டயக்கும 3. தொவல்மடுவ 4. கம்மடுவ 5. சூனியம் சடங்கு

16. ருகுணு பிரதேசத்தில் நடைபெறும் பிரதான சாந்திச் சடங்கு
1. ரட்டயக்கும 2. சன்னியக்கும 3. கம்மடுவ 4. சூனியம் சடங்கு 5. கொஹம்பகங்காரிய

17. கஜமுகாசுரன் போர் பெரும்பாலும் நடைபெறும் கோவில்
1. முருகன் கோவில் 2. பிள்ளையார் கோவில் 3. கிருஸ்ணன் கோவில்
4. அம்மன் கோவில் 5. சிவன் கோவில்

18. பின்வருவனவற்றுள் சடங்காகவும் நாடகமாகவும் நடைபெறும் ஆற்றுகை
1. வேட்டைத் திருவிழா 2. பொன்னர் சங்கர் 3. காமன் கூத்து 4. வசந்தன் கூத்து 5. வாசாப்பு

19. 'வைசூரி' எனப்பட்ட நோயிலிருந்து விடுபடுவதற்காக நடத்தப்பட்ட தமிழ்ச் சடங்கு
1. குளுர்த்திச் சடங்கு 2. வேட்டைத் திருவிழா 3. சூரன்போர் 4. பாண்டவர் வனவாசம் 5. கழிப்பு

20. ஊர்வல அரங்கப் பண்புகளுடன் நடைபெறும் சடங்கு
1. கழிப்புச் சடங்கு 2. பாண்டவர் வனவாசம் 3. குளுர்திச் சடங்கு 4. மகிடி 5. வசந்தன்

21. கப்பல் கட்டுதல், கப்பலில் வருதல் எனும் சூழமைவுகளைச் சித்திரிக்கும் சிங்கள ஆற்றுகைக் கலை வடிவம்
1. கோலம் 2. தொவில் 3. சொக்கரி 4. ரட்டயக்கும 5. நாடகம்

22. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில நாடகக் கழகத்தை ஸ்தாபித்தவர்
1. ஜோண் டி சில்வா 2. சார்ள்ஸ்டயஸ் 3. ஈ.எ.ஃப்.சி.லுடோவைக்
4. பேராசிரியர் எதிரிவீர சரத் சந்திர 5. இ.ரி.மக்கின்ரயர்

23. இலங்கையில் தயாரிக்கப்பட்ட பழமையான 'நாடகம' எனக் கருதப்படுவது
1. அஹெலபொல 2. சிங்களே நாடகம் 3. மனமே 4. சிங்கபாகு 5. ஹரிஸ்சந்திர

24. தாழ்நாட்டு சிங்களவர்களிடையே பெரும்பாலும் செல்வாக்குப் பெற்றுள்ள வேடமுக நாடகம்
1. சொக்கரி 2. நாடகம் 3. நூர்த்தி 4. கோலம் 5. ரட்டயக்கும

25. இலங்கையில் பழமையான பாஸ்கு நாடகம் நிகழ்த்தப்பட்ட இடமாகக் கருதப்படுவது
1. பமுணுகம 2. பேசாலை 3. பிட்டிப்பனை 4. தூவை 5. யாழ்ப்பாணம்

26. 'மாயாவதி' எனும் நாடகத்தை ஆக்கியவர்
1. ஜோண் டி சில்வா 2. சார்ள்ஸ்டயஸ் 3. ஈ.எ.ஃப்.சி.லுடோவைக்
4. பேராசிரியர் எதிரிவீர சரத் சந்திர 5. இ.ரி.மக்கின்ரயர்

27. பேராசிரியர் எதிரிவீர சரத் சந்திரவின் முதலாவது சுயமுயற்சி நாடகம் எனக் கூறப்படுவது
1. சுனேத்ரா 2. மாயாவதி 3. பஹினகலாவ 4. ஹங்கிங்ஹொரா 5. மாலினி

28. 1954 இல் தயாரிக்கப்பட்ட பிரபல வானொலி நாடகம்
1. பபாவதி 2. மனமே 3. மாலினி 4. ரத்தரங் 5. மாயாவதி

29. மகாகவி காளிதாஸர் எழுதிய அபிக்ஞான சாகுந்தலத்தின் மூலக்கதை
1. இராமாயாணத்தில் 2. கந்த புராணத்தில் 3. பாகவதத்தில்
4. மகாபாரதத்தில் 5. மகாபுராணத்தில் உள்ளது

www.ikeo.uk

30. ‘மண்சுமந்த மேனியர்’ எனும் பிரபல நாடகத்தை எழுதிய ஈழத்தவர்
1. சு.வித்தியானந்தன் 2. க.கணபதிப்பிள்ளை 3. நா.சுந்தரலிங்கம் 4. கா.சிவத்தம்பி 5. ம.சண்முகலிங்கம்

31. ஒடுக்கப்பட்டோர் அரங்கு எனப்படும் அரங்கச் செயற்பாடுகளைத் தொடக்கியவர்
1. ஹென்றிக் இப்சன் 2. பேட்டல் பிறச்ட் 3. அகஸ்தா போல் 4. பீற்றாபுறுக் 5. அயனஸ்கோ

32. மூன்றாவது அரங்கு எனப்படும் செயற்பாட்டுடன் தொடர்புடையவர்
1. பாதல் சர்க்கார் 2. ஆறுமுகம் 3. இராமானுஜம் 4. பம்மல் கே சம்பந்தம் 5. குணசேகரன்

33. திருக்குற்றாலக்குறவஞ்சி எனும் நாடக இலக்கியத்தைப் படைத்தவர்
1. குமரகுருபரர் 2. திரிகூடராஜப்ப கவிராயர் 3. அபிராமிபட்டர் 4. அருணகிரிநாதர் 5. தியாகராஜர்

34. சேக்ஸ்பியரின் நாடகங்களைத் தமிழில் மொழியாக்கம் செய்த ஈழத்துக் கவிஞர்
1. நீலாவணன் 2. மகாகவி 3. முருகையன் 4. சுபத்திரன் 5. பசுபதி

35. சமூக மாற்றத்திற்கான அரங்கு எனும் நூலின் ஆசிரியர்
1.க.சிதம்பரநாதன் 2.சி.ஜெயசங்கர் 3.ஞா.ஜெயரஞ்சினி 4.சி.மௌனகுரு 5.கா.சிவத்தம்பி

36. பின்வருவனவற்றுள் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் சிறுவர் நாடகம் அல்லாதது
1. ஆச்சி சுட்ட வடை 2. பண்பும் பயனும் 3. கண்டறியாத கதை
4. தப்பி வந்த தாடி ஆடு 5. முயலார் முயல்கிறார்

37. உலக நாடக வரலாற்றில் முதலாவது நடிகர் எனக் கொள்ளப்படுபவர்
1. அரிஸ்ரோட்டில் 2. காளிதாஸர் 3. பரதர 4. மீலாபாங் 5. தெஸ்பிஸ்

38. நாட்டிய தர்மி அரங்கு எனப்படுவது
1. அலங்கார அரங்கு 2. யதார்த்த அரங்கு 3. இயற்பண்புவாத அரங்கு
4. மோடிமை அரங்கு 5. இயல்பு நெறிவாத அரங்கு

39. இந்தியாவில் குச்சுப்புடி ஆடப்படும் மாநிலம்
1. தமிழ்நாடு 2. ஆந்திரா 3. கேரளா 4. கர்நாடகா 5. மகாராஸ்டிரா

40. சங்ககால கோடியரின் பிரதான வாத்தியம்
1. முரசு 2. தடாரி 3. யாழ் 4. முழவு 5. கிணை

www.ikdu.lk

பகுதி – 11

A பிரிவிலிருந்து இரண்டு வினாக்களுக்கும், B பிரிவிலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக

பிரிவு - A

01. அ. நாடக எழுத்துருவொன்று உட்கொண்டிருக்க வேண்டிய மூலங்களை விதந்துரைக்கப்பெற்றுள்ள ஏதாவது நாடக எழுத்துருவின் துணையுடன் எடுத்துக் காட்டுக (08 புள்ளி)

    ஆ. அபசுரம் நாடக பாடத்தினூடாக வெளிப்படும் அபத்த நாடகப் பண்புகளை எடுத்துக் காட்டி விளக்குக (07 புள்ளி)

02. அ. பாத்திரச் சித்திரிப்பு என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (03 புள்ளி)
    ஆ. அன்ரிக்கனி நாடகத்தில் அன்ரிக்கனி பாத்திரம் சந்திக்கும் இக்கட்டான நிலைமைகளை எடுத்துக் காட்டுக (06 புள்ளி)
    இ. பாத்திரச் சித்திரிப்பின் போது நடிகருக்கு கற்பனைத் திறன் முக்கியமானது என்பதை உதாரணங்களுடன் விளக்குக (06 புள்ளி)

03. அ. காமன் கூத்தில் பார்வையாளர்களின் வகிபங்கை விளக்குக (05 புள்ளி)
    ஆ. பாண்டவர் வனவாசம் எனும் சடங்கில் காணப்படும் நாடகச் சூழமைவுகளை எடுத்துக் காட்டுக (05 புள்ளி)
    இ. சன்னியக்கும சடங்கில் காணப்படும் நாடகப் பண்புகளை எடுத்துக் காட்டுக (05 புள்ளி)

பிரிவு B

04. அ. நாடகப் படைப்பாக்க உருவாக்கத்தில் தளர் நிலைப் பயிற்சிகளின் அவசியம் குறித்து விளக்கம் செய்க (07 புள்ளி)
    ஆ. நாடகச் சூழமைவு என்றால் என்னவென விளக்கி சூழமைவுகளை உருவாக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை எடுத்துக் காட்டுக (08 புள்ளி)

05. அ. நாடகம் ஏனைய ஆற்றுகைக் கலைகளிலிருந்து வேறுபட்டு நிற்கும் தன்மையினை எடுத்துக் காட்டி விளக்குக(08 புள்ளி)
    ஆ. இன்றைய நவீன தகவல் யுகத்தில் நாடகக் கலையின் முக்கியத்துவம் பற்றி விளக்குக. (07 புள்ளி)

06. நாடக அரங்க ஆற்றுகையில் அரங்க வெளிகளின் தன்மைகள் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை பின்வரும் ஆற்றுகைக் கலைகளுடன் தொடர்புபடுத்தி விளக்குக
    அ. வடமோடி, தென்மோடிக் கூத்து (05 புள்ளி)
    ஆ. காமன் கூத்து (05 புள்ளி)
    இ. மகிடிக் கூத்து (05 புள்ளி)

www.ikeou.lk